**தொகுதி 8 – கடன்** **செயற்பாட்டுத் தாள் 8-7**

**வசூலிப்பு பாத்திரம் ஏற்று நடித்தல்**

**தொண்டரின் பாத்திரம்**

தொண்டர் தொலைபேசியை எடுத்துப் பேசுவதுபோல் நடிக்கிறார். வசூலிப்பவருக்கு, தாங்கள் சரியென நினைக்கும் முறையில் பதிலளிப்பதுதான் நடிப்பவரின் பங்கு.

**வசூலிப்பவரின் ஸ்கிரிப்ட்** (ஓரளவு அதிகாரத்துடன் இதை விரைவாகப் பேசவும்)

- (பெயர்) கொண்டவர் இருக்கிறாரா?
- நீங்கள் கட்டவேண்டிய $__________ தொகையுடைய கடன் பாக்கியை உங்களுக்குத் தெரிவிப்பதற்காக உங்களை அழைத்தேன்.
- நீங்கள் உட னடியாக முழுத் தொகையையும் கட்டவேண்டும்.
- முழுத் தொகையையும் கட்டாவிட்டால் கிரெடிட் பியூரோவுக்கு அது தெரிவிக்கப்பட்டு உங்கள் கிரெடிட் வரலாறு மேலும் பாதிக்கப்படும்.
- நாம் சட்ட நடவடிக்கை எடுக்கவும் வேண்டிவரலாம்; அப்போது கடன் பாக்கியையும் அதை வசூலிப்பதற்கு உண்டான செலவையும் சேர்த்து நீங்கள் கட்டவேண்டிவரும்.
- இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முழுத்தொகையையும் உங்களிடம் இன்று வாங்க நான் தயாராக உள்ளேன்.

**முன்னேறுவதற்கான ஆலோசனைகள்**

- தொண்டர் ஒரு சிறு தொகையைத் தருவதாகச் சொன்னால் அந்தத் தொகையை அதிகரித்துத் தரும்படி கேழுங்கள்.
- வசூலிக்கும் முயற்சியில் வெற்றிபெறும்வரை கடனாளியின்மீது அழுத்தத்தை பிரயோகிக்க புதிய முறைகளில் பேசுங்கள்.
- குழுவிடமிருந்து வேறு பதிலொன்று வருகிறதா என்று பார்க்க வசூலிப்பவர் செய்வதற்கு அனுமதியில்லாத சில காரியங்களைக் கூட நீங்கள் செய்துபார்க்கலாம்.